Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 14
இதழ் 69

யாழ்ப்பாணம் சித்திரை 7 ரபியுல் 4 புதன்கிழமை (19-4-72)

UNDERGRADUATE LIBRARY
3 MAY 1972

உங்களுக்குத் தேவையான
இலங்கையில் தயாரிக்கப்பெற்ற
...டபாண்ட
மலசலகூட
பாவனைப் பொருட்களை
மலிவான விலையில் பெற்றுக்கொள்ள

கதிர் ஹாட்வெயர்ஸ்

11/1 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

அளவெட்டி அடவு கடைக்கொள்ளை

# சந்தேகநபர் மூவரும் மாஜிஸ்திரேட் முன் ஆஜர்!

## அடவு வைத்தவர்களின் வாக்கு மூலங்கள் பதிவு

யாழ்ப்பாணம், புதன்

அளவெட்டி அடவுகடை கொள்ளை சம்பந்தமாக பொலிசாரினால் கைது செய்யப்பட்ட 3 சந்தேக நபர்களும் நேற்று மல்லாகம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். 3 சந்தேக நபர்களும் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

அளவெட்டி அடவுகடையில் நகைகளை அடவு வைத்தவர்களின் வாக்குமூலங்களை பொலிசார் தற்பொழுது பதிவு செய்து வருகின்றனர். பொலிஸ் சார்ஜன் தலைமையில் 8 கோஷ்டியாக பிரிந்து இவ்வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டு வருகிறது.

மாவிட்டபுரம், தெல்லிப்பழை, அளவெட்டி மற்றும் பகுதிகளில் பொலிஸ் கோஷ்டியினர் அடவு வைத்தவர்களின் வாக்குமூலங்களை பதிவுசெய்து வருகின்றனர்.

இதே வேளையில் பொலிஸ் அதிகாரி கந்தையா தலைமையில் பொலிஸ் கோஷ்டியினர் இச் கொள்ளைபற்றி தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

கொழும்பு சென்றிருந்த கண்ணூர் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. நரேந்திரராசா நாளை யாழ்ப்பாணம் வந்து சேருவார் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அடவுகடை கொள்ளை பற்றி தினமும், தகவல் கிடைத்து வருவதாகவும் வடபகுதி நகைக்கடை முதலாளிகள் பொலிசாருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்று தெரிவித்தார்.

இக் கொள்ளையில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் மற்றும் நான்கு சந்தேக நபர்களை பொலிசார் தேடி வருவதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## யூ. என். பி. தொழிற்சங்க கட்டிடம் தீ பிடித்தது!

கொழும்பு, செவ்

கொள்ளுப்பிட்டியில் சிறி கோதாவுக்குப் பக்கத்தேயுள்ள ஐக்கியதேசியக்கட்சியின் தொழிற்சங்க காரியாலயம் நேற்றிரவு தீப்பற்றி எரிந்தது.

சுமார் இரவு 9 மணியளவில் ஏற்பட்ட இத்தியை அணைக்க உடனடியாக கொழும்பு தீயணைக்கும் படை அழைக்கப்பட்டது.

இக் காரியாலயத்திலிருந்த சில தஸ்தாவேஜுகள், சஞ்சிகைகள் தீக்கிரையாகின:

தீயணைப்புப் படைத் தலைவர் டபிள்யு டி. சில்வா இது திட்டமிட்டுச்செய்த வேலையாக இருக்கலாம் என தெரிவித்துள்ளார்.

காரியாலயத்தில் தீ பிடிப்பதற்கு சிறிது நேரத்துக்கு முன்னர் காரியாலயவளவுள் கட்சியின் கூட்டமொன்று நடைபெற்றது.

இத் தீ விபத்து சம்பந்தமான விசாரணையில் இருந்து காரியாலயத்தில் தீ பற்றிய சமயம் அங்கு காவல் வைக்கப்பட்டிருந்த இரு காவல்காரர்களும் இரவு உணவுக்காகப் போயிருந்தார்கள் எனத் தெரியவந்தது. இது சம்பந்தமாக மேலும் புலன் விசாரணை நடைபெறுகிறது. (ச)

15 ஆயிரம் பெறுமதியான 140

## கடத்தல் கைக்கடிகாரங்கள் கைப்பற்றப்பட்டன

கொழும்பு, செவ்

கொழும்பு துறைமுகத்தில் உள்ள கப்பலொன்றில் புலவர்களையுடைய 140 கைக்கடிகாரங்களை சுங்கப்பகுதியினர் கைப்பற்றினர். இக் கைக் கடிகாரங்கள் 15 ஆயிரம் ரூபா பெறுமதியுடையவை என மதிப்பிடப்பட்டுள்ளன. தலைமைப் பாதுகாப்பு அதிகாரி திரு. பேசில் பெருப்பிக்கோ, உதவி அதிகாரி திரு. எஸ். செல்வரத்தினம் ஆகியோர் தலைமையில் சென்ற குழுவே அனுமதி பெறாத கைக்கடிகாரங்கள் வைத்திருப்பதைக் கண்டுபிடித்தனராம். இக் கப்பலின் என்ஜின் பகுதியில் வேலை செய்யும் எல்லோரும் தடுத்து வைக்கப்பட்டனர். இவர்களில் ஒருவரே இக் கடிகாரங்களுக்குரியவரென கண்டுபிடிக்கப்பட்டு சுங்கப்பகுதி உதவிக்கலெக்டர் திரு. வே. வாகீசரத்தினத்தின்முன் ஆஜர் செய்யப்பட்டார். கைக்கடிகாரங்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் ரூபா 21,000 அபராதம் விதிக்கப்பட்டது. (ச)

## வறிய மக்களை முன்னேற்ற கூட்டுறவு புனரமைப்பு

கொழும்பு, செவ்வாய்

"முதலாளிகளுக்கும் வறிய மக்களுக்கும் இடையேயுள்ள இடைவெளியை நிரப்பி, வறிய மக்களை முன்னேற்றுவதற்கும் கூட்டுறவுத் துறையை முன்னேற்றுவதற்கும் கூட்டுறவுத்துறையை மாற்றி யமைக்கவேண்டியது அத்தியாவசியமான ஒன்றாகும்."

மாதம்பிட்டி முல்லையில் நடைபெற்ற கூட்டம் "ஒன்றில் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சின் பதில் அமைச்சர் திரு. ரத்நாயக்கா உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் முதலாளிகள்-வறியவர்கள் ஆகிய இரு சாராருக்குமிடையில் உள்ள இந்த இடைவெளி சோஷலிசப் பாதையில் சென்றுகொண்டிருக்கும் நாடுக்கு நன்மை பயப்பதாக அமையாது. கூட்டுறவுத் துறையைப் புனரமைப்பதால் மக்கள் தங்களுக்குத் தேவையான பாவனைப் பொருள்கள் யாவற்றையும் சங்கக் கடைகளில் கஷ்டமின்றிப் பெற்றுக்கொள்ளலாம் அதே வேளையில் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களையும் கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் விற்பனைசெய்யலாம் எனக் குறிப்பிட்டார். [ச]

### ஒரே சூலில் ஐந்து குழந்தைகள்

எடின்பரோ ஏப். 18

இரண்டரை ரூத்தலுக்கும் மூன்று ரூத்தலுக்கும் இடைப்பட்ட நிறையுள்ள 5 குழந்தைகளை ஸ்கொட்லாந்துப் பெண் ஒரேசூலில் பெற்றுள்ளார். அறுவைச் சிகிச்சை மூலம் பிறந்துள்ள இக் குழந்தைகளில் நான்கு பெண்கள். ஆண் ஒன்று. இவை ஆறு வாரங்கள் குறைமாதமாகப்பிறந்தாலும் தேக சுகத்துடன் இருப்பதாகத் தெரிகிறது.

### யு. எஸ். குண்டுவீச்சு தற்காலிக நிறுத்தம்

நியூயோர்க், ஏப் 18

வியட்நாமில் போர்நிறுத்தக் கோட்டுக்கு வடக்குப் பகுதியில் குண்டு வீசுவதை தற்காலிகமாக நிறுத்திவைக்கும் படி அதிபர் நிக்ஸன் அமெரிக்க விமானப் படைகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார். வடவியட்நாமியர் எப்படி இதை ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதை அறிவதற்காகவே நிக்ஸன் இந்த நடவடிக்கை எடுத்திருக்கிறாராம்.

### காமன்வெல்த்தில் வங்காள தேசம்

காமன்வெல்த் கூட்டமைப்பில் வங்காள தேசம் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. இது பற்றிய உத்தியோகபூர்வமான அறிவிப்பு நாளை புதன்கிழமை அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வங்காள தேசம் காமன்வெல்த் கூட்டமைப்பில் 31வது நாடாகச் சேர்ந்துள்ளது. இந்தக் கூட்டமைப்பில் இது சேர்வதைக் காமன்வெல்த் கூட்டமைப்பு அங்கீகரித்துள்ளது.

பேராதனையில்

## ஆசிய சமாதான பௌத்த மகாநாடு

கொழும்பு, செவ்வாய்

உலகில் சமாதானத்தை நிலைநாட்டும் வழிவகைகளைக் காணும் ஆசிய பௌத்த மகாநாடொன்று இலங்கையில் நடைபெறவிருக்கிறது.

இம்மகாநாடு பேராதனையில் இம்மாதம் 23ம் திகதியிலிருந்து 27ம் திகதிவரை நடைபெறும். இம் மாநாட்டில் 18 நாடுகளின் பிரதிநிதிகளும், ஐந்து சர்வதேச நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்து கொள்கின்றனர்.

மல்வத்தை, அஸ்கிரிய பீடங்களின் தேரோக்களும், கலாச்சார அமைச்சின் சார்பில் கலாச்சார அமைச்சர் திரு. எஸ். எஸ். குலதிலகாவும் கலந்துகொள்வார்கள்.

## நியூ கலிங்கன்

இறுதி
4-45 மாத்திரம்
BANCO FOR A GOLD KILLER

தினசரி 6-30, 10-00
தில்லானா மோகனாம்பாள்

21-ம் திகதி முதல்
காவல் தெய்வம்

## யாழ் தியேட்டர்

(சுபிகேசன்துறை)
தினசரி 6-30 இரவு 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி - லக்ஷ்மி
நடித்த
**காவல் தெய்வம்**

## வெஸ்லி சினிமா

(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சௌகார் ஜானகி
நடித்த
**உயர்ந்தமனிதன்**

## REGAL (Jaffna)

Daily 5-15, 7-15 p.m.
Sat. Sundays 10-30
James Mason
in
SPRING & PORT WINE

தினசரி 2-00 இரவு 9-45
சிவாஜி-விஜயகுமாரி
நடித்த
**குங்குமம்**

## MANOHARA

Jaffna
Daily 4-45 7 & 9-45 p.m.
Sat. Sundays 10-30 a m
William Holden
in
THE WILD BOUNCH

## ராணி

[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன - ஜெயலலிதா
சுந்தரராஜன்—சந்திரபாபு
மற்றும்பலர் நடித்த
பாலாஜியின் **ராஜா** (வர்ணச் சித்திரம்)

## ராஜா

[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா
முத்துராமன் - தங்கவேலு
நடித்த
**நிலவே நீ சாட்சி**

## சாந்தி — சுன்னாகம்

தினசரி 3 காட்சிகள்
V. S. T. பிலிம்ஸ்
**குத்து விளக்கு**

## வெலிங்டன் (யாழ். நகர்)

தினசரி பி. ப. 2-30. மாலை 6-30 இரவு 10-00
சனி, ஞாயிறு காலை 10-30

லிடோ [யாழ்ப்பாணம்] தினசரி காலை 10-30

★ சிவாஜி ★ லக்ஷ்மி
★ முத்துராமன் ★ நிர்மலா
நம்பியார் — நாகேஷ் — சச்சு
மற்றும் பலர் நடித்த



**தங்கைக்காக**

இசை: விஸ்வநாதன் டைரக்ஷன்: யோகானந்த்

## லிடோ (யாழ்ப்பாணம்)

தினசரி பி.ப. 2-00, மாலை 6-00 இரவு 9-30
★ எம். ஜி. ஆர். [இரட்டை வேடங்களில்]
★ சரோஜாதேவி
★ ரத்னா ★ நம்பியார்
நடித்த
**எங்க வீட்டுப் பிள்ளை**

## வரி விளம்பரம்

நட்சத்திரம், வயது, பூர்வீக விபரம், 60க்கும் ஒரு இலக்கம் குறித்து, முத்திரையுடன் சுடிதமூலமும் நேரிலும் பதில் பெறலாம். இலவச ஆருடம். டாக்டர் ந. சண்முகராஜா ஜே. பி. கொக்குவில். 4175

### விற்பனைக்கு

தமிழ் சித்திரை 1972-1973 வரையுள்ள இராசிபலன்கள் ஒவ்வொரு ராசிக்கும் ஒரு புத்தகமாகப் பன்னிரண்டு ராசிக்குமுள்ளன விலை ரூபா 1-50. வே. த. கைலாசனம் ஆனைப்பந்தி சோதிட நிலையம், மாவிட்டபுரம், தெல்லிப்பழை. 4904

50 பரப்பு தோட்டம், குடியிருப்பு, தொழிற்சாலை அமைப்பதற்கான காணி விற்பனைக்குண்டு. இக்காணி யாழ்ப்பாண நகரிலிருந்து ஐந்து மைல் தூரத்தில் பலாலி வீதிக்கருகாமையில் அமைந்துள்ளது. விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்தாருடன் தொடர்பு கொள்ளவும். ஐ. கோபாலசுந்தரம், 39/12, 3-ம் ஒழுங்கை மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். 4933

வீடுகட்டுவதற்கு உகந்த காணி — யாழ்ப்பாணம் 19 பேர்ச் புகையிரத நிலையத்துக்கருகாமையில், ஆஸ்பத்திரி, பெரியகடை, சின்னக்கடை, பள்ளிக்கூடங்கள் ஆலயங்களுக்கு மத்தியில் உள்ளது. பேர்ச் ஒன்று 1200 ரூபா வரையில் தொடர்பு கொள்ளவும். M. I. Rajaratnam, Love Lane Uduvil. 4931

### கல்வி

Holiday tuitions-Home visited இளைப்பாறிய பட்டதாரி ஆசிரியர்கள் வீடுகள் சென்று ஆங்கிலம், எண்கணிதம், குடியியல், சரித்திரம் புவியியல் ஆகிய பாடங்கள் கற்றுக் கொடுப்பார்கள். விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 4909. C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 4909

## பவானி

மூளாய்
தினசரி 6-30 இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
சாரதா, ஏ. வி. எம். ராஜன்
நடித்த
**துலாபாரம்**

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்
மாலை 4-45 மட்டும்
THE AMPUSHERS

2-வது வாரம்
தினசரி 6-30 இரவு 9-45
**தனிப்பிறவி**
(புத்தம் புதிய கொப்பி)

### தேவை

பப்படத்தொழிற்சாலைக்கு தொழிலாளர்கள் (ஆண், பெண்) தேவை. நேரில் வரவும். மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில்) த. சிவதாசன், கோட்டன்ரேட், மானிப்பாய். 4939

யாழ்ப்பாண நகரிலுள்ள பெற்றோல் நிலையமொன்றிற்கு உதவியாளர் தேவை. பிணப்பணம் 1000/- கட்டுத்த சம்பளம் கொடுக்கப்படும். நற்சாட்சிப்பத்திரங்களுடன் 25-4-72க்கு முன் விண்ணப்பிக்கவும், விளம்பர இல. 4938. C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 4938

### கந்தபுராணப் படிப்பு

சுதுமலை, செவ்வாய்.
சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோவிலில் வழமை போல் நடைபெறும். கந்தபுராணப் படிப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை (21-4-73) 12 மணியளவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

.....

### சுற்றுப்போட்டி

அச்சுவேலி. செவ்.
வேலணை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினரால் திரு. வா. அருணகிரி ஜே. பியினால் வழங்கப்பட்ட வெற்றிக் கேடயத்திற்காக நடாத்தப்படும் மூன்றாவது ஆண்டு வருடாந்த தாச்சி சுற்றுப் போட்டிகள் இம்மாதம் 22ந் திகதி மேற்படி கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன. இப்போட்டிக்கு திரு. ச. புவனேந்திரம்பிள்ளை மத்தியஸ்தராகக் கடமையாற்றுவார்.

—

### ''மின்சபையின் பொறுப்பில் விடுக''

கேதீஸ்வரம், செவ்.
மன்னார் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வீ. ஏ. அழகக்கோனும் மன்னார் மக்கள் குழுப் பிரதிநிதிகளும் மன்னார்பகுதி மின்சார விநியோகம் பற்றிய தமது கருத்துக்களை மன்னார் அரசாங்க அதிபரிடம் வலியுறுத்தித் தெரிவித்துள்ளனர்.

மன்னாரிப் பட்டினசபை நடத்திவரும் மின்சார விநியோகம் பாவனையாளர்களுக்குக் கஷ்டத்திற்குமேல் கஷ்டத்தை நெடுகிலும் தந்துகொண்டிருப்பதால் அதனைத் திருப்திகரமானவகையில் நிறைவேற்ற அப்பகுதி மின்சார விநியோகத்தை மின்சார சபையின் பொறுப்பில் விடவேண்டுமென்ற யோசனை கூறப்பட்டுள்ளது.

### ஏலவிற்பனை

இயந்திர வள்ளம்

நல்ல நிலையிலுள்ள முன் இயந்திரம் செய்யப்பட்ட ஏரா நீளம் 29 அடி வள்ளம் மேல் நீளம் 36 அடி, அகலம் 9 அடி 21 பரிகு காலிகள் பூட்டப்பட்ட இயந்திர வள்ளம். 29-4-72 சனிக்கிழமை காலை 10 00 மணியளவில் வருத்தித்துறைக்கு அண்மையிலுள்ள இன்பருட்டி கடற்கரையில் வைத்து ஏலத்தில் விற்கப்படும். விபரங்களுக்கு பி. தங்கவேலாயுதம், இன்பருட்டி, அல்வாய் வடக்கு, அல்வாய். 3932

### கேள்விப் பத்திரம்

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சுமார் 750 வெற்றுச் சாக்குகள் விற்பனைக்குண்டு. கேள்விப்பத்திரப் படிவங்கள், ரூபா 50/- செலுத்திச் சங்கக் கந்தோரில் பெறலாம். கேள்விகள் பதிவுத் தபால் மூலம் 24-4-72 கிடைக்கக்கூடியதாக, பொது முகாமையாளருக்கு அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்
4143

### சுங்க ஏலவிற்பனை

கீழ்க்காணும் பொருட்கள் பிரசித்த ஏலவிற்பனையின் மூலம், யாழ்ப்பாணம் சுங்க இலாகாவில் 1972-ம் ஆண்டு சித்திரை மாதம் 26-ம் திகதி காலை 10-30 மணியளவில் விற்கப்படும். கேள்வி முடிவில் முழுத்தொகையில் 25 வீதம் உடனே கட்டப்படவேண்டும். ஏலவிற்பனையின் முழுநிபந்தனைகளும் 28-5-1954, 10675-ம் நம்பர் அரசாங்கவர்த்தமானியில் (பகுதி i பிரிவு ii) குறிக்கப்பட்டிருக்கிறது.

27 மூடை சாரம்பு.
6 கட்டு மீன்பிடிவலைகள்.
2 மூடை சாதிக்காய்ப்பூ.
1 மூடை கராம்புக்குச்சு.

எஸ். எம். ஜே. சேனரத்ன,
யாழ் பாவட்ட சுங்க சேகரிப்பாளருக்காக.

சுங்க இலாகா,
யாழ்ப்பாணம்,
18-4-72. 3933

### திறப்பு யாருடையது?

யாழ்ப்பாணம் கே. கே. எஸ் வீதியிலுள்ள ஸ்ரீலங்கா புத்தகசாலையில் ஒற்றைத் திறப்பொன்றைக் கண்டெடுத்து அங்கு கடமையாற்றும் ஆர். அருட்செல்வம் என்பவர் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

---

பணத்திற்காகக் குழந்தையை பேரம் பேசும் விசித்திரத் தம்பதிகள்
பணத்தைக்கொண்டு பெற்றோரை தேடும் குழந்தை
இவர்களை சந்திக்க

## யாழ். வின்ஸர் திரையில்

21 - 4 - 72 வெள்ளி முதல் காண்பிக்கப்படும்

முத்துராமன், கே. ஆர். விஜயா, சந்திரபாபு, பேபி ராணி
நடித்த
**கண்ணே பாப்பா**

டைரக்ஷன்: பி. மாதவன், பி. ஏ.

இரு தினங்கள் மட்டும்
தினசரி 4 காட்சிகள் **இரு கோடுகள்**

## வடவியட்நாம் முயற்சிகளை முறியடிக்க

# "அமெரிக்கா தன்னாலான எல்லாவித எதிர் நடவடிக்கைகளையும் எடுக்கும்"

## யு. எஸ். வெளிஉறவு அமைச்சர் கூறுகிறார்

நியூயோர்க், ஏப். 18

தென்வியட்நாம் மீது வடவியட்நாமியர் நடத்தும் ஆக்கிரமிப்பு வெற்றியடையாமல் இருப்பதற்காக அமெரிக்கா தன்னாலான எல்லா எதிர்ப்பு நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று அமெரிக்க வெளிஉறவு அமைச்சர் திரு. வில்லியம் ரோஜர்ஸ் கூறியிருக்கிறார்.

இச்சமயம் இந்த ஆண்டு இறுதிக்குள் வியட்நாமிலுள்ள அமெரிக்க ராணுவத்தினருக்கான எல்லா செலவுகளையும் நிறுத்திவிடப்போவதாக அமெரிக்க செனட் சபையின் வெளிஉறவுக்குழு பயமுறுத்தியிருக்கிறது.

வட வியட்நாம் மீது அமெரிக்கர் குண்டுவீசுவது நியாயமான செயல்தான் என வெளிஉறவு அமைச்சர் திரு. ரோஜர்ஸ் இக்குழுக்கூட்டத்தில் எடுத்து விளக்கியதின் பின்னர் குழுமேற்படி முடிவை எடுத்தது.

வடவியட்நாமியர் பிடித்து வைத்துள்ள அமெரிக்க கைதிகள் அனைவரையும் அவர்கள் விடுதலை செய்து விடுவார்களானால் இவ்வாண்டு இறுதியாக்கில் வியட்நாமிலுள்ள அமெரிக்க ராணுவத்தினருக்காக அளிக்கப்பட்டு வரும் செலவு தொகைகளை முற்றாக நிறுத்தி விடவேண்டும் என குழுமுடிவு எடுத்தது. இதற்கு 9 பேர் சாதகமாகவும் ஒருவர் எதிராகவும் வாக்களித்துள்ளனர்.

இதற்குமுன்பதாக வெளிஉறவு அமைச்சர் திரு ரோஜர்ஸ் வடவியட்நாம் மீது குண்டுவீசுவதற்கான நியாயங்களை விளக்கிப் பேசினார்.

தென்வியட்நாமை ஆக்கிரமிப்பதற்கு வடவியட்நாமியர் எடுக்கும் நடவடிக்கைகளை வெற்றி பெறாமல் செய்வதற்காக அமெரிக்கா தன்னாலான எல்லா எதிர் நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று திரு. ரோஜர்ஸ் கூறினார். தென்வியட்நாமிலுள்ள வியட்காங்குகளுக்கு ஆயுதசப்ளைகள் போய்ச் சேரும் வழிகளை அடைப்பதற்காகவே இக்குண்டு வீச்சுப் பிரதானமாக நடத்தப்படுவதாக அவர் சொன்னார்.

வடவியட்நாமியரின் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெறுமானால் பாரிஸ் அமைதிப் பேச்சுக்களையும் அமெரிக்கா ஆரம்பிக்கப் போவதில்லையென்று அவர் கூறினார்.

அமெரிக்கா கவலை

சோவியத்யூனியனுக்குச் சொந்தமான கப்பல்களுக்கு அமெரிக்கக்குண்டு வீச்சினால் ஏற்பட்டுள்ள சேதங்களுக்காக அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது. சர்வதேச கடற்பரப்பில் ஈடுபட்டுள்ள கப்பல்களுக்கு இக்குண்டு வீச்சினால் சேதம் ஏற்பட்டிருப்பின் அமெரிக்கா கவலைப்படுவதாகவும் ஆனால் வடவியட்நாமியருக்கு ஆயுதங்கள் வழங்கும் சோவியத் யூனியன் தனது பொறுப்பை உணர்ந்திருக்க வேண்டும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

வடவியட்நாமில் அமெரிக்கர் நடத்திய குண்டு வீச்சினால் சோவியத் யூனியனுக்கு சொந்தமான நான்கு கப்பல்கள் சேதமுற்றிருப்பதாக சோவியத் யூனியன் குற்றஞ்சாட்டியிருக்கின்றது.

### நோபல்பரிசு பெற்ற ஜப்பானியர் தற்கொலை

டோக்கியோ, ஏப். 18

இலக்கியத்துக்காக நோபல் பரிசுபெற்ற முதலாவது ஜப்பானிய எழுத்தாளர் தற்கொலை புரிந்து கொண்டுள்ளார்.

டோக்கியோவுக்கு அருகிலுள்ள அவரது கடற்கரை வாசஸ்தலத்தில் தமது அலுவல் அறையில் செத்துக் கிடக்கக்காணப்பட்டார்.

இலக்கிய விற்பன்னரான யூசோனரி கவாபத்திர என்ற இவரது மரணத்துக்கான எதுவும் தெரியாவிடினும் விஷவாயுவை சுவாசித்ததின் மூலம் அவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார். அவரது வாயில் விஷவாயுக்குழாய் ஒன்று இருந்தது.

### 'கார்களை ஏன் இடது பக்கமாக ஓட்டுகிறோம்?'

லண்டன், ஏப் 18

பிரிட்டன், ஜப்பான், ஐஸ்லாந்து போன்ற நாடுகளும் இலங்கை உட்பட சாம்ராஜ்யத்தின் சில நாடுகளும ஏன் வீதியின் இடப்பக்கமாக எப்பொழுதும் வாகனங்களை ஓட்டும் விதிகளைக் கடைப்பிடிக்கின்றன.

இதற்கான உண்மையான காரணம் என்னவென்று ஒருவருக்கும் தெரியாது.

இருப்பினும்சிலர்ஒருகுறிப்பிட்ட காரணத்தை எடுத்துக்காட்டுகிறார்கள். முன்னைய காலத்தில் பிரிட்டிஷ் பிரயாணிகளை அச்சுறுத்தியவர்கள் பெரு வீதிக்கொள்ளைக்காரர்கள்தாம். இவர்கள் திடீர் திடீரென தனிப்பட்ட பெரு வீதிகளின் மறைவுகளிலிருந்து வெளிப்பட்டுப் பிரயாணிகளைத் தாக்குவது சகஜம். இதனை எதிர்க்கவும் தம்மைப் பாதுகாக்கவும் எனப் பிரயாணிகள் இடப்பக்கமாகப் பிரயாணம் செய்துகொண்டு வலக்கைப்பக்கமாக தம் வாள்களை வைத்திருந்தனராம். இப்பழக்கமே பின்னர் வீதியின் இடப்பக்கமாகப் பிரயாணம் செய்ய வேண்டும் என்ற விதியைக் கொணரக் காரணமாக இருந்தது என்கின்றனர் சிலர்.

### இடைக்கால அரசியல்சட்டம்

கராச்சி, ஏப் 18

பாகிஸ்தான் தேசியசபை அந்த நாட்டுக்கான இடைக்கால அரசியல் சட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. அது ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டதால் எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று அதிபர் பூட்டோ ராணுவச்சட்டத்தை நீக்கிவிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### கடற்பாசியில் இருந்து புரதம்

லண்டன், ஏப் 17

நீர் நிலைகளிலும் குளம் குட்டைகளிலும் ஒருவகை கடற் பாசியிலிருந்து மிகச் சிறந்த புரத சத்தைப்பெறலாமென ஆராய்ச்சியாளர் கண்டு பிடித்திருக்கின்றனர். மன்செஸ்டர் சர்வகலாசாலையின் விஞ்ஞான நுண்தொழில் நிறுவனத்தில் நடைபெற்ற ஆராய்சிகளின் போது இவ்வுண்மை வெளிப்பட்டிருக்கிறது

சாதாரண புல்லிலும் பார்க்க இக்கடற்பாசி நூறுமடங்கு விரைவாக வளரும் தன்மையுடையது. இதற்குக் காரணம் கடற்பாசியானது நீரின் மேல்மட்டத்தில் ஒரே அளவாகப்பரவி வளருவது. புல்லிலும் பார்க்க இதன் புரதசத்து 50 வீதம் அதிகமாக இருப்பதால் கால்நடைகளுக்கு மிகவும் ஏற்ற உணவாக அது அமைந்துவிடுகிறது.

கால்நடைகளுக்கேற்ற புரத சத்துக் குறைவாக இருக்கும் அபிவிருத்தி அடையும் நாடுகளில் வெகு எளிதில் இக்கடற்பாசியை வளர்த்திடலாம் குளம் குட்டைகளில் வளரும் இக்கடற்பாசியை பத்து நாட்களுக்கு ஒருதடவை அறுவடை செய்யலாம்.

ஆஸியாவின் பந்தோபஸ்து

### "ஆஸிய நாடுகள் கூடி முடிவெடுக்கவேண்டும்"

மாஸ்கோ, ஏப் 18

"ஆசிய மக்களின் நலவுரிமைகளுடன் உடன்பாடுடையமுறையில் ஆசியாக் கண்டத்தின் சமாதானத்தையும் பந்தோபஸ்தையும் பற்றிய ஆசிய நாடுகள் ஒன்றுகூடி முடிவெடுக்கவேண்டிய அவசியம் தோன்றிவிட்டது" என் சோவியத் அரசியல் விமர்சகர் விக்டர் மாயேவ்ஸ்கி "பிராவ்தாவில்" எழுதியுள்ள கட்டுரையில் கூறியுள்ளார்.

மக்களின் முதுகுக்குப் பின்னால் உலகப்போக்கை யாராகிலும் நிர்ணயிக்கும் காலம் மலையேறிவிட்டது. ஒவ்வொரு நாட்டுக்கும் அதன் தலைவிதியை நிர்ணயிக்கும் உரிமை உண்டு என்று முடிவுறும் இவ்விமர்சனம், அண்மையில் நடைபெற்ற அமெரிக்க - சீன பேச்சுவார்த்தை ஆசியாவில் சமாதானத்தை நிலைநாட்ட ஏதுவாய் இருக்குமா? என்று வினவுகிறது

உலக சமாதானத்தின் அத்தியாவசிய அம்சமாக ஆசிய சமாதானத்தைக் கருதி கவலை காட்டும் அனைவரும் இன்று இக்கேள்வியைக் கேட்கின்றனர் பேச்சுவார்த்தையின் முடிவில் சீனவும் அமெரிக்காவும் பஞ்சசீலக் கோட்பாட்டில் தமது விசுவாசத்தைப் பிரகடனம் செய்தது.

சமாதான சகஜீவனத்தை 'கம்யூனிஸ்ட் பிரச்சாரம்' என்று அமெரிக்கா நிராகரித்தது என்பதை இங்கு ஞாபகப்படுத்தவேண்டும். மறுபுறத்தில் 'பஞ்சசீலம்' பிரகடனத்தில் ஒருகாலத்தில் கையொப்பமிட்ட சீனத் தலைவர்களோ பிற்காலத்தில் சமாதான சகஜீவனக்கொள்கையை தாக்குவதில் சளையாது ஈடுபட்டனர்.

ஆகவே இவர்கள் இன்று பஞ்சசீலம் மீதும் சமாதான சகஜீவனம் மீதும் விஸ்வாசப் பிரமாணம் செய்வது தமது உண்மை நோக்கத்தை ஜோடனை செய்வதற்கே என்று மாயேவ்ஸ்கி கூறுகிறார்.

சீன அமெரிக்க அறிக்கையில் வாரும் ஆசியாவிலும் பசபிக்கிலும் ஆதிக்கம் பெறக் கூடாதென்ற வாக்கியத்தை உதாரணம்காட்டி அவர் கூறுகிறார். வியட்நாம் ஜனநாயகக் குடியரசு, தென்வியட்நாம், லாவோஸ், கம்போடியா மீது மிருகத்தனமான விமானத்தாக்குதல் தொடர்ந்து நடத்தும்போது, தென்கொரியாவில் அமெரிக்க துருப்புகள் நிறுத்தப்பட்டுள்ள போது, தாய்லாந்திலும் ஜப்பானிலும் இதர ஆசிய நாடுகளிலும் அமெரிக்க ராணுவத் தளங்கள் இயங்கும்போது, அமெரிக்க ஏழாவது கடற்படை இதன், தென்கிழக்காசிய நாடுகளின் கரையில் இருக்கும்போது அமெரிக்க ஆளும் வட்டாரம் ஆதிபத்தியம் வைக்கவில்லை என்று பேசுவதில் என்ன அர்த்தம் இருக்க முடியும்?" என்று

"மூன்றும் உலகின் சார்பில்பேசுவதாகப் பெருமைபாடும் போது அண்டை நாடுகளின் கழிப்பு மாகாணங்களை முடக்கி விடும்போது, அந்நிய மண்ணில் உரிமைகொண்டாடும்போது மாவோயிஸ்ட் தலைமை ஆதிபத்திய ஆசையை கைவிடுவதாக பேசுவதில் என்ன அர்த்தம் இருக்க முடியும்?" என்று அவர் கேட்கிறார்.

### தினமும் 3000 தொன் குண்டுகள்

நியூயோர்க், ஏப். 17

தினமும் அமெரிக்க நூறு பி 52 விமானங்கள் 3000 தொன் குண்டுகளை வியட்நாம் மீது பொழிந்து வண்ணமிருக்கின்றன.

குவாமிலிருந்தும், தாய்லாந்திலிருந்தும் புறப்படும் "பறக்கும் கோட்டைகள்" கடந்த தினங்களில் தென்வியட்நாம் மாகாணங்களில் தாக்குதலை விஸ்தரித்துள்ளன.

அமெரிக்கப் போர் குற்றங்களை விசாரித்து வரும் கமிஷன் அமெரிக்க விமானப்படை மார்ச் மாதத்தில் தென்வியட்நாமில் 1400 முறை குண்டுவீச்சு நடத்தியதென்றும் ஜனச் செறிவான பகுதிகள் இதனால் சேதத்துக்காளானதென்றும் கூறுகிறது.

அமெரிக்க-சைகோன் துருப்புகள் தென் வியட்நாம் மக்களை தொடர்ந்தும் வேட்டையாடி வருகின்றன. மார்ச் 10-ந் திகதி 8 மாகாணங்கள் மீது 10,000 துருப்புகள் ஏவிவிடப்பட்டு மக்கள் மீது "பரிசோதனை" நடத்தின மார்ச் 14-ந் திகதி விமானப்படை "குடை விரித்த" பாதுகாப்பு வழங்க 25,000 அமெரிக்க-சைகோன் துருப்புகள் சைகோனைச் சுற்றிய பகுதியில் ராணுவ நடவடிக்கை எடுத்தன இதற்கு தென் வியட்நாம பிரஜைகள் இரேயர் பலியானார்கள் என்றும் கமிஷன் அறிக்கை கூறுகிறது. ......

### தேவாலயத்தில் திருட்டு

கேதீஸ்வரம், செவ்:

மன்னாரைச்சேர்ந்த எழுத்தூர் புனித அடைக்கலமாதா கோவிலில் ஆலயத்துக்குச் சொந்தமான பல பொருட்கள் திருட்டுப் போயுள்ளன, இது சம்பந்தமாக ஆலயப் பொறுப்பாளர்கள் பொலிசாரிடம் முறையிட்டு செய்ததின் பேரில் கள்ளர்களைக் கண்டுபிடிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### "கலைஞர்களை தகுந்த முறையில் கௌரவிக்கவேண்டும்"

மருத்தித்துறை செல்வாய் "பொதுமக்கள் உழைப்போடு மாத்திரம் நின்றுவிடாமல் தமது கலை, கலாச்சாரங்களைப் பாதுகாப்பதிலும் பேணி வளர்ப்பதிலும் முன்னுக்கு நிற்கவேண்டும். புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றத்தினர் ஆண்டுதோறும் தமிழன்னைக்கு விழாவெடுத்துக் கௌரவிக்கிறார்கள் இதற்காக இதன் நிர்வாகிகளை நான் பாராட்டுகிறேன். எங்கள் நாட்டில் கலைஞர்களும் எழுத்தாளர்களும் சங்கீதவித்வன்னர்களும் தகுந்தமுறையில் கௌரவிக்கப்படவேண்டும்."

இவ்வாறு வடமராட்சிப் பகுதிக் காரியாதிகாரி திரு. மு தம்பிமுத்து புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றத்தினரின் பத்தாவதாண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

கலைமன்றத் தலைவர் திரு மு கணேசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு தம்பிமுத்து தொடர்ந்து பேசுகையில் நாம் எமது கலைகளுக்கு மதிப்புக்கொடுத்தால்தான் அவற்றை வளர்க்கமுடியும். நம்மை நாமே உணராத வரைக்கும் எமக்கு விடிவு இல்லை என்றார்.

சங்கீதரத்தினம் செல்வி மு கோகரஞ்சிதத்தின் கச்சேரியும் திரு ஆர் சற்குணராஜா, சிவராசா, குணரத்னம் கோஷ்டியினரின் மெல்லிசை நிகழ்ச்சியும் நெல்லை கோபன் குழுவினரின் "பாரதி பாம்புப்பாணம் வருகிறார்" என்ற நவீன கதாகாலட்சேபமும் மற்றும் ஹாஸ்யசமூக நாடகங்களும் விழாவில் இடம்பெற்றன.

"நகைத்திருட்டுக்களை

# கண்டுபிடிக்க பொலிசாருடன் ஒத்துழையுங்கள்"

## வட இலங்கை நகை வியாபாரிகள் சங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், புதன்
"நாட்டில் பல இடங்களிலும் வழிமறித்துக் கொள்ளையடித்தலும் நகைத்திருட்டுகளும் அதிகரிக்கும் இவ்வேளையில் நகைக்கடைக்காரர்களும் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும் தெரியாதவர்களிடம் நகைகளை வாங்கினால் எந்த நேரமும் எம்மை பிரச்சினைகள் எதிர்நோக்கும்.
வட இலங்கை நகை வியாபாரிகள் சங்க விசேட பொதுக்கூட்டத்தில் பேசிய சங்கச் செயலாளர் மேற்கண்டவாறு கூறினார்.
ஏ. கே. எஸ். நகை மாளிகை மேல்மாடியில் நடந்த இக்கூட்டத்துக்கு திரு. நல்லதம்பி தலைமை வகித்தார்.
இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து கூறியதாவது:
ஒரு சில பெரிய பொறுப்பற்ற செயல்கள் இலங்கைக் கணக்கில் முதலீட்டி நெடுங்காலமாய் கௌரவத்தையும் நல்லபெயரையும் கட்டிக்காத்து வந்த வர்த்தகப் பெரும் சமூகத்துக்கே இடையூறு ஏற்படுகிறது. குற்றத்தைத் தடுக்கும் முறையைக் கையாளும் பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் நகைக்கடை முதலாளிமார் ஒத்துழைப்பது அத்தியாவசியமாகும் களவு நகை என்று தெரியாமல் வாங்கியிருந்தால் பொலிசார் உங்களை விசாரிக்கும் போது உண்மையைச் சொல்லி அவர்களுக்கு உதவிபுரியுங்கள்.
நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் ஆ. நல்லதம்பி, உபதலைவர்: அபூசாலி ஹாஜியார் இணைச் செயலாளர் எஸ். சிவநேசர், எம். வை. எம். தாஹா, பொருளாளர்: பொ. அம்பலவாணர்
பதினொரு பேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

### இசை விழா

குருநகர், செவ்
மண்டைதீவு தமிழிசைச் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு இசைவிழா இம்மாதம் 21, 22, 23 ஆகிய திகதிகளில் மண்டைதீவு திருப்புலம்மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.
ஈழத்துக் கலைஞர்கள் பலர் கலந்துகொள்ளும் இவ்விழாவின் முதல்நாள் நிகழ்ச்சிக்கு தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினமும் இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்கு முன்னாள் தீவுப்பகுதி எம். பியும் மேற்படி இசைச் சங்க போசகருமான வழக்கறிஞர் திரு. வ. நவரத்தினமும் மூன்றாம் நாள் நிகழ்ச்சிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததம்பிரானும் தலைமைதாங்குகின்றனர்.


வெளிவர உள்ளது ஈழத்தின் முதலாவது
வார சஞ்சிகை

# கமலம்

★ ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், வாசகர்களின் இரசனை விருத்திக்கும் வழி வகுக்கும் வார சஞ்சிகை.

★ "ஈழநாடு" ஸ்தாபனத்தினர் வெளியிடவிருக்கும் இவ் வார சஞ்சிகை. வாராவாரம் மகிழ்விலும் நிறைவிலும் திளைக்கவைக்க விரைவில் மலர உள்ளது.

★ "கமலம்" ஒரு குடும்பப் பத்திரிகை கமலத்தில் ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களினதும் இந்திய எழுத்தாளர்களினதும் படைப்புகள் இடம்பெற உள்ளன.

★ சமூகத் தொடர்கதைகள், வரலாற்று நவீனங்கள், அருமையான சிறுகதைகள், அறிவியற் சமய, கட்டுரைகள், இனிய கவிதைகள் நகைச்சுவைத் துணுக்குகள் யாவையும் "கமலம்" கொண்டிருப்பாள்.

★ ஈழத்தில் வெளிவரும் முதலாவது வார சஞ்சிகையான "கமலம்" பிரபல ஓவியர்களின் சித்திரங்களைத் தாங்கி கவர்ச்சியாக வெளிவரவுள்ளாள்.

★ 56 பக்கங்கள் ★ விலை: 50 சதம்

எழுத்தாளர்கள், வாசகர்கள் யாவரும் கமலத்திற்கு, நாவல், குறுநாவல், சிறுகதை, கவிதை நகைச்சுவைக் கட்டுரைகள், துணுக்குகள் என்பனவற்றை எழுதி அனுப்புங்கள். ஆசிரியர், "கமலம்" "ஈழநாடு" த. பெ. எண். 49, யாழ்ப்பாணம்.

விபரங்களுக்கு:
"கமலம்"
"ஈழநாடு" த. பெ. எண். 49,
சிவன் கோயில் மேலே வீதி, யாழ்ப்பாணம்.


## உங்கள் பலன்

சித்திரை மாதம் 7-ந்திகதி (19-4-1972)

மேஷம்: கடமையில் ஆர்வம்பிறக்கும், டாக்டர்களுக்குச் செல்வாக்குப் பெருகும் நிம்மதியான தினம்.
ரிஷபம்: செலவினங்கள் அனைத்தும் மிஞ்சியதாகவே இருக்கும், சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படலாம்.
மிதுனம்: குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம். வைத்தியச் செலவுக்கும் இடமுண்டு.
கடகம்: வருமானத்திலும் உயர்ச்சிகிடைக்கும். புதுமனை கட்டுவதற்குக்கூடச் சிலர் ஆலோசிக்கலாம்.
சிம்மம்: எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும். வேண்டாத நடவடிக்கைகளின் மூலம் நன்மதிப்பை இழந்துகொள்ள நேரிடலாம்.
கன்னி: நீண்டநாள் எதிர்பார்த்த பொருள்வரவு இன்று கிடைக்கலாம் அறிஞர் ஆலோசனையும் கிடைக்கும்.
துலாம்: பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமையைத் தேடித்தரலாம், பொருள் வரவுக்கும் இடமுண்டு.
விருச்சிகம்: பழைய நினைவுகள் துன்பத்தைக் கொடுக்கும். தனிவழிப்பயணத்தைத் தவிர்த்தல் நன்று.
தனு: சுளந்திரவழியாகப் பொருள்வரவுக்கு இடமேற்படும். பெரியோர்கள் ஆதரவுகிடைக்கும், கண்ணியமான தினம்.
மகரம். பிறனொழிமூலம் நல்ல செய்திகிடைப்பதற்கு இடமுண்டு. முதியவர் ஒருவர் உங்களுக்கு தக்க சமயத்தில் ஆதரவுதருவார்.
கும்பம்: சிலருக்கு அதிர்ஷ்டவாய்ப்புகளும் கிடைக்கலாம். குடும்பத்தில் நல்ல திருப்பம் ஏற்படும், உற்சாகமான தினம்.
மீனம்: தன்னார்வத்தால் பகைத்துக் கொள்வீர்கள் வீணான சிந்தனைகளுக்கு இடமளியாது இருக்கவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 19.4.72

(செய்திகள், காலை 6-30 பகல் 12-45, மாலை 6,00 இரவு 9-00)

காலை- 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை 6-25 இஸ்லாமியநற்சிந்தனை 6-40 அறிவிப்புகள் 6-50 பக்திப்பாடல், 7-15 மறக்க முடியாதபாடல்கள், 7-30 மரணச்செய்திகள், 7-35 குரல்வளை, 8-00 இசை வேளை, பி. வி. ராமன், வி. ஜெயவீரசிங்கம் 8-10 இஸ்லாமியகீதம்.
இரவு 6-10 அறிவிப்புகள் 6-15 சத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி நடத்துபவர் சகோ: சவேரதன் அந்தோனிஜோசப் 6-30 பாட்டு சரோஜினி தனபாலசிங்கம், 7-00 கஞ்சன் அம்மானை கண்ணகி அவதாரம் 7-15 முச்சந்தி பலதும்பத்தும், 7-30 உலகச் செய்திகள், 7.35 மெல்லிசைப்பாடல்கள், பாடுபவர் பொன் தெய்வேந்திரன் பாடல் யாத்தவர் ஜி. பாலசுப்பிரமணியம், 7-45 நாடகம் பாசக்குரல் எழுதியவர் சி. சரவணபவன் (சிற்பி) 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-10 செய்தியின் பின்னணியில் 9-30 இசைக்கச்சேரி என். மரம், நடராஜா.

# புங்குடுதீவு விளையாட்டுப் போட்டி முடிவுகள்

புங்குடுதீவு, திங்கள்
புங்குடுதீவிலுள்ள ஊரதீவு இளந்தமிழர் மன்ற ஆதரவுடன் ஊரதீவு கன்னித்தமிழர் விளையாட்டுக் கழகத்தினர் நடாத்திய விளையாட்டுப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்ற சங்கிலியன் இல்லம் வ. நவரத்தினம் வெற்றிக் கேடயத்தைச் சுவீகரித்துக்கொண்டது. எல்லாளன் இல்லம் இரண்டாவது இடத்தையும் பண்டாரவன்னியன் இல்லம் மூன்றாவது இடத்தையும் பெற்றன.
கழகத் தலைவர் திரு. எஸ். கே. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நடைபெற்ற இப்போட்டியினை மேற்பிரிவுக்கான இருநூறு மீற்றர் ஓட்டப் பந்தயத்தை திரு. எஸ். கே. மகேந்திரன் ஆரம்பித்து வைத்தார். திரு. பொ. மாணிக்கவாசகர் கழகக் கொடியை ஏற்றிவைத்தார் கிராமசேவையாளர் திரு. தி. பாலசிங்கம் வெற்றியீட்டியோருக்குப் பரிசில்களை வழங்கினார்.
மேற்பிரிவுச் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட சங்கிலியன் இல்லத்தைச் சேர்ந்த க. குகநேசன், கோபாலவரன் வெற்றிக்கிண்ணத்தையும் மத்திய பிரிவுச் சம்பியனாகத்தெரிவு செய்யப்பட்ட சங்கிலியன் இல்லத்தைச் சேர்ந்த செ. சிவலிங்கம் வி. ஏ. கந்தையா வெற்றிக் கிண்ணத்தையும் பெற்றுக்கொண்டார். கீழ்ப்பிரிவின் இணைச் சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்ட க. சிவனேஸ்வரன், க. சண்முகசுந்தரம் செ. உதயகுமார் ஆகியோருக்கு என். ஆர். இராஜரத்தினம் வெற்றிக்கிண்ணம் வழங்கப்பட்டது. மற்றும் நான்குவித போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.
நடை ஓட்டப் போட்டி ம. விக்கினேஸ்வரன், க. சந்திரகுமார், நா. மனோகரன். ஓ ட் ட ம் ஒட்டப்போட்டி, த அருட்பிரகாசம், ஆ. யோகநாதன், கா. கனகரத்தினம். விநோத உடைப்போட்டி ம. விக்னேஸ்வரன், சந்திரகுமார், க. சிவானந்தராசா ஆண்களுக்குரிய பார்வையாளர் ஓட்டப்போட்டி சி. தனபாலசுந்தரம். க மகாலிங்கம் ஆ. பரமலிங்கம், பெண்களுக்குரிய பார்வையாளர் ஓட்டப்போட்டி செ. புனிதவதி, இ. அம்பிகாபதி, ம. சரஸ்வதி. சங்கீதக்கதிரை நா. நாகேஸ்வரி, ந. தர்மாம்பிகை, செ. புனிதவதி. மத்தியஸ்தர்களுக்குரிய ஓட்டப்போட்டி வி. எஸ். சிவலிங்கம், கா. கந்தசாமி, க. ஜெயவீரசிங்கம், கயிறுஇழுத்தல் போட்டி இக்கல் வலைகரிப்புப் போட்டி எல்லாளன் இல்லம் பண்டாரவன்னியன் இல்லம், சங்கிலியன் இல்லம். பிரதம நடுவராக ஆசிரியர் திரு. பொ. சுந்தரமூர்த்தி கடமையாற்றினார்.

### யாழ்ப்பாணத்தில் கிளை

வெள்ளவத்தை செவ்வாய்
அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை ஒன்றை விரைவில் ஆரம்பிக்கவேண்டும் என்றும் இவ்வாண்டின் அதன் வருடாந்தப் பொதுக் கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடாத்தவேண்டும் என்றும் கோரும் தீர்மானமொன்று அஞ்சல் எழுதுவினைஞர் சங்க ஆட்சிக்குழுக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.
இம்மாதம் 3-ம் திகதி யாழ்ப்பாணம் கிராண்ட் வீதியில் அஞ்சல் திணைக்களத்தின் புதிய பிரதேச கணக்காளர் கிளை ஆரம்பிக்கப்பட்டுள்ளதைத்தொடர்ந்தே சங்கம் மேற்படி நடவடிக்கையை எடுக்கவுள்ளது.

### நாட்டின் முதுகெலும்பு

உடுப்பிட்டி செவ்வாய்
'தொழிலாளர்கள்தான் நாட்டின் முதுகெலும்பானவர் மக்களரசாங்கத்தின் அபிவிருத்தித்திட்டங்கள் தொழிலாளரின் எதிர்கால விமோசனத்திற்கு வழிவகுத்துள்ளது. பின்தங்கிய மக்களின் எதிர்காலத்தை விருத்திப்படுத்தவேண்டியது எமது கடமையாகும்.'
இவ்வாறு கரவை மூர்த்தி போக்குவரத்து சங்கக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் திரு சிதம்பரேஸ்வரன் கூறினார்.

### அத்திபாரக்கல் நாட்டினர்

புங்குடுதீவு, செவ்
புங்குடுதீவு கலைச் சுடரொளி இளைஞர் மன்றத்தினரின் வாசிகசாலைக் கட்டடத்திற்கான அத்திபாரக்கல் நாட்டுவிழா புங்குடுதீவு ஒன்பதாம் வட்டார மக்கள் குழுத் தலைவர் திரு. சோ. க. ஐயம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.
மன்றக்கொடியை ஆசிரியர் திரு. மு. தளையசிங்கம் ஏற்றிவைக்க விழாவினை வல்லன் முன்னேற்றக்கழகத் தலைவர் திரு. சி. கோபாலபிள்ளை ஆரம்பித்துவைத்தார். புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர் திரு. மு. இராமலிங்கம் வல்லன் கனிஷ்ட மகாவித்தியாலய அதிபர் திரு. மு. நடராசா பிரபல வர்த்தகர் திரு. கு. குழந்தைவேலு ஆகியோர் அத்திபாரக்கல்லை நாட்டினர்.
இவ்விழாவில் எஸ். கே. மகேந்திரன், டாக்டர் சி. கணேஷ் கிராமசபை உறுப்பினர் திரு மா. க. வைத்தியநாதன் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர். கலைநிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெற்றன.

### சேவை நலம் பாராட்டு

மீசாலை செவ்வாய்
நாவற்குழி மகாவித்தியாலயத்தில் இருபது ஆசிரியையாகக் கடமையாற்றி பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நுண்கலைப் பயிற்சி பெறச் சென்றுள்ள திருமதி கமலம் மகாலிங்கத்திற்கு வித்தியாலய அதிபர் திரு யோசெப் தலைமையில் சேவைநலம் பாராட்டுவிழா நடைபெற்றது. ஆசிரியர் திரு வி. சுப்பையா, திரு சு. சொக்கலிங்கம் உட்படப் பலர் திருமதி கமலத்தின் சேவையினைப் பாராட்டிப் பேசினர்.

### பழைய இடத்துக்கு மீண்டும் மாற்றம்

மீசாலை, செவ்வாய்
சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலிருந்து பதவி உயர்வு பெற்று பன்றித்தெய்வநுளங்கரசினர் வித்தியாலயத்துக்குச்சென்ற திரு. கே. சங்கரப்பிள்ளை உடனடியாக இந்துக்கல்லூரிக்கே பதவி உயர்வுடன் திரும்பி வந்து சேர்ந்தார். இவரதுசேவை இந்துக்கல்லூரிக்கும் தென்மராட்சி ஆசிரியர் சமுதாயத்துக்கும் இன்றியமையாதது என்று சங்கமும், கல்லூரியும் எடுத்துக்கூறியதை முன்னிட்டு இவர் மீண்டும் பழைய கல்லூரிக்கு மாற்றப்பட்டார்.

# 'கட்சிப்பாகுபாடின்றி பணியாற்றுகிறார்'

யாழ்ப்பாணம், புதன்

'கடந்தகாலத்தில் தமிழ்த் தலைவர்கள் கட்சிக்கண்ணோட்டத்துடன்தான் பணியாற்றிவந்தனர். ஆனால் அமைச்சர் குமாரசூரியர் கட்சிபாகுபாடின்றி சகல தமிழ் மக்களுக்கும் பணியாற்றிவருகிறார்'

சாவகச்சேரியில் நடந்த சித்த ஆயுர்வேத டாக்டர்களின் கூட்டமொன்றில், பாரிஸ்டர் எம். சிவானந்தன் பேசும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

டாக்டர் க. வேல்மணி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பாரிஸ்டர் சிவானந்தன் மேலும் கூறியதாவது: அமைச்சர் என்ற முறையில், நாட்டிலுள்ள சகல மக்களுக்கும் பணியாற்றிவரும் அதே நேரத்தில் அமைச்சர் குமாரசூரியர், தமிழ் அமைச்சர் என்ற முறையில் தமிழ் மக்களின் குறைகளையும் தீர்த்துவருகிறார். வடக்கு, கிழக்கு, மலைநாட்டு தமிழர்களுக்குமட்டுமன்றி, மற்றும் பகுதிகளில் வாழும் தமிழர்களுக்கும் அவர் பணியாற்றிவருகிறார்.

தவறணைகள் திறக்கும்

## திகதியை ஒத்திவைக்க கோரிக்கை

உடுப்பிட்டி, செவ்வாய்

கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மேமாதம் முதலாம் திகதி திறந்துவைக்கப்பட விருக்கும் தவறணைகளை அன்றைய தினம் திறப்பது பொருத்தமற்றதென்று வடமராட்சி கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்க அமைப்பாளரும், வடபகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிப் பிரமுகருமான டாக்டர் திரு. எஸ். எஸ். மாசிலாமணி தற்காலிக நிதியமைச்சர் திரு பேர்னுட் சொய்சாவிடம் தெரிவித்துள்ளார்.

"வெசாக் பண்டிகை பௌத்தர்களுக்கு மட்டும் உரியது. பொங்கல் இந்துக்களுக்கு மட்டுமுரியது. நத்தார்ப் பண்டிகை கிறிஸ்தவர்களுக்கு மட்டும் உரியது. ஆனால் மேதினம் உலகெங்கணுமுள்ள சகல மக்களும் சாதி, மத இன பேதமின்றிக் கொண்டாடும் தினமாகும். மேதினத்தை இலங்கையில் பரவலாக்கிய பெருமை இடதுசாரிக் கட்சிகளுக்கும் சிறப்பாக லங்கா சமசமாஜக் கட்சிக்குமே உரியதாகும். பாட்டாளிகள், தொழிலாளிகள், விவசாயிகள் கொண்டாடும் மேதினத்தன்று கள்ளுத் தவறணைகளைத் திறப்பது பொருத்தமல்ல. ஆதலால் இத்திகதியை ஒத்திவைத்து மே 3ம் திகதி ஆரம்பிப்பதே உசிதமானதென்றும் அவர் அமைச்சரிடம் கேட்டுள்ளார்.

யாழ். செயலக உதவியாளரும் திட்டவேலைவாய்ப்பு அதிகாரியுமான திரு. வே. சண்முகலிங்கம், யாழ். மாநகரசபை உறுப்பினர் ஏ. விசுவநாதன் ஆகியோருடனும் டாக்டர் மாசிலாமணி இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார்.

ஜே. ஆர். மனுமீது தீர்ப்பு

## நடவடிக்கை எடுப்பதற்கு தடை உத்தரவு

கொழும்பு, செவ்.

திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனாவுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் தீர்மானங்கள் எதனையும் கொண்டுவரக்கூடாதெனவும், திரு. ஜயவர்த்தனாவை ஐக்கியதேசியக்கட்சி உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கும் எந்தத் தீர்மானத்தையும் நிறைவேற்றக்கூடாதென்றும் திருவாளர்கள் டட்லி சேனநாயகா, திரு. எம். டி. எச். ஜயவர்த்தனா, காமினி ஜயசூரிய, விவனகே ஆகிய நால்வர்மீதும் உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஏப்ரல் 17-ல் கூடவிருந்த கூட்டத்தில் திரு ஜயவர்த்தனாவைக் கட்சியிலிருந்து வெளியேற்றுவது சம்பந்தமாக எந்தவொரு தீர்மானத்தையும் கொண்டுவரக் கூடாதென உத்தரவிட வேண்டுமென திரு. வி. தியாகலிங்கம் கியூ. ஸி., திருவாளர்கள் எச். டபிள்யூ. ஜயவர்த்தனா கியூ ஸி, எம். திருச்செல்வம் கியூ ஸி, ஸி. ரங்கநாதன் கியூ ஸி, மேல். பெரேரா, கே. டபிள்யூ சுபசிங்க ஆகியோரின் அனுசரணையுடன் நீதியரசர் திரு வலகம்பாயமுன் திரு ஜயவர்த்தனாவின் சார்பில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். இம்மனுவை ஏற்றுக்கொண்ட நீதியரசர் வலகம்பாய இடைக்கால உத்தரவொன்றை விடுத்துள்ளார்.

### மணவாளக்கோலம்

யாழ்ப்பாணம், புதன்

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி ஆலய மகா கும்பாபிஷேக தினமாகிய நாளை வியாழக்கிழமை காலை 10 மணி முதலாக சுவாமி அம்மனுக்கு நவோத்தரசத சங்காபிஷேகமும், மாலை தருமை ஆதீனம் ஸ்ரீ ல ஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகளின் மீனாஷி கல்யாணம் பற்றிய இன்னிசைக் கதாப்பிரசங்கமும் இரவு 7-30க்கு ஸ்ரீ கல்யாணசுந்தரமூர்த்தி அருணாட்சி அம்மன் சகிதம் கைலாசவாகனத்தில் எழுந்தருளி திருவீதி வலம் வருதலும் மணவாளக் கோல உற்சவமும் நடைபெறும்.

### பெற்றார் ஆசிரியர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

கரவெட்டி கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலையில் கடந்தவாரம் மேற்படி வித்தியாலய பெற்றார் ஆசிரியர் சங்கக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் பெற்றோரும் ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து சிரமதான பணி மூலம் உடைந்த தளபாடங்களைத் திருத்தல், வேலிகளை அடைத்தல் கிணற்றைச் சுத்தம் செய்தல் பாடசாலையின் சுற்றுப்புறங்களைச் சுத்தம் செய்தல் ஆகிய வேலைகளைச் செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டம் தலைமையாசிரியர் திரு. க. கந்தவனம் தலைமையில் நடைபெற்றது.



### சமாதான நீதிபதி

நெல்லியடியைச் சேர்ந்த திரு. நடேச பாஸ்கரன் பருத்தித்துறைப் பகுதிக்கு சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். நெல்லியடி பட்டின சபையின் இரண்டாம் வட்டார உறுப்பினரான இவர் பன்னிரண்டு வருட காலம் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டராகவும் கடைசியாக இரத்தினபுரியில் இன்ஸ்பெக்டராகவும் கடமையாற்றியவர். நெல்லியடி சன சமூக நிலையம், நெல்லியடி சன்மார்க்க சபை, நெல்லியடி மக்கள் குழு ஆகியவற்றின் செயலாளராகக் கடமையாற்றும் இவர், கிராம அபிவிருத்திச்சபை, பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றிலும் உறுப்பினராகி முக்கிய பங்கெடுத்து வருகிறார். நெல்லியடி அரசினர் மகாவித்தியாலய பெற்றார் - ஆசிரியர் சங்கம் உருவாகுவதற்குக் காரணமாக நின்று, இப்போது அதன் செயலாளராகவும் இருக்கிறார். இவர் பொலிஸ் இன்ஸ்பெக்டராகக் கடமையாற்றிய காலத்தில் தமது திறமையான சேவைக்காக 325 தடவைகள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளார். இவர் இன்று 'நெல்லியடி இண்டஸ்ரியல் வேக்ஸ்' என்ற தொழில் நிறுவனத்தின் அதிபராக இருக்கிறார்.

—கா. மே.

இலங்கையில்

### தமிழ்நாடு கல்விமான்கள்....

கேதீஸ்வரம், செவ்

தமிழ்நாடு சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த இருபது கல்விமான்கள் அடுத்த மாதம் 5ம் திகதியில் இருந்து திரு. இ. சின்ன இருசன் தலைமையில் இலங்கையில் இருவாரகால சுற்றுப்பிரயாணமொன்றினை மேற்கொள்ளவிருக்கின்றனர். அவர்களுள் கலைஞர்களும் ஆசிரியர்களும் இலக்கியகர்த்தாக்களும் அடங்குவர்.

தலைமன்னார் துறைமுகத்தை அவர்கள் கப்பல்மூலம் வந்தடைந்ததும் அவர்களது இலங்கை நண்பர்களால் வரவேற்கப்படுவர். அவர்கள் தமது சுற்றுலாவின்போது கல்வி, கலை, கலாச்சார கட்டடங்களையும் பத்திரிகைக் காரியாலயங்களையும் ஈழத்து வரலாற்றுப் புகழ் பெற்ற இடங்களையும் பார்த்து அறிவார்கள்.

### மஹோற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

நீர்வேலி கந்தசாமி கோவில் மகோற்சவம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறுகிறது. 27, 28, 39-ந் திகதிகளில் முறையே இரதோற்சவமும், தீர்த்தோற்சவமும், பூங்காவன உற்சவமும் நடைபெறும். 24ந் திகதி பழனி ஆண்டவர் உற்சவமும் நடைபெறவிருக்கிறது. இவ்விழாவில் பல அன்பர்கள் பாற்காவடி, அன்னக்காவடி எடுப்பார்கள். தேர்த் திருவிழாவன்று வலமபஜனைக்கோஷ்டியின் பஜனைப்பாடல்களும் மேளக்கச்சேரிகளும் இடம்பெறும்.

அமெரிக்க குண்டு வீச்சு

## ஆசி. - ஆபிரிக்க நாடுகள் கவலை

நியூயோர்க். ஏப். 18

வியட்நாமில் அமெரிக்க விமானங்கள் படுமோசமாக குண்டுவீசத்தொடங்கியிருப்பது பற்றி ஐ. நா. விலுள்ள ஆசிய ஆபிரிக்க நாடுகள் பெரிதும் கவலைகொண்டுள்ளன.

வியட்நாமில் அதிபர் நிக்ஸன் மேற்கொண்டுள்ள கொள்கையினால் சர்வதேச நிலைமை மிக ஆபத்தான கட்டத்தை அடைந்துள்ளது என்று இந்நாடுகளின் பிரதிநிதிகள் கூறுகின்றனர்.

போரைநிறுத்தி அமைதியை நிலைநாட்டும் அளவுக்கு ஐ. நா. திறனற்றுக் கிடப்பது குறித்தும் அவர்கள் கவலைதெரிவித்துள்ளனர்.

வடவியட்நாம் மீது அமெரிக்கா குண்டு வீசுவதற்காக இப்பொழுதுபயன் படுத்தும் பி 52ரக விமானங்கள் முன்பு பயன்படுத்தப்பட்ட பாண்டம்ஜெட் விமானங்களைவிட நான்குமடங்கு சக்திவாய்ந்தவை யென்று அவர்கள் கூறுகின்றனர்.

வியட்நாம் சம்பந்தமான ஜெனிவா மாநாட்டை மீண்டும் கூட்டவேண்டும் என்றும் அதில் பங்கு பற்றுவதற்கு சோவியத் யூனியன் சம்மதிக்க வேண்டுமென்றும் பிரிட்டன் கோரியிருப்பதாக பிரிட்டிஷ் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

**புதுடில்லியில் ஆர்ப்பாட்டம்**

வடவியட்நாம் தலைநகர் மீதும்ஹைபொங் துறைமுகத்தின்மீதும் அமெரிக்கர் குண்டு வீசித்தாக்கியிருப்பதை எதிர்த்துபுதுடில்லியில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள். திரு ஏ. கே. கோபாலன் தலைமையில் ஊர்வலமாகச் சென்ற இவர்கள் அமெரிக்கத் தூதரகத்தில் குறிப்பு ஒன்றை கையளித்தனர்.

### செக். விமானம் கடத்தப்பட்டது

செக்கோஸ்லாவாக்கியாவில் போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த விமானமொன்றை இருவர் மேற்கு ஜெர்மனிக்குக் கடத்தினர். இவ்விமானம் ஜெர்மனியில் தரையிறங்கியதும் பொலிசார் இவர்களைக் கைது செய்தனர். விமானி ஒருவர் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். கடத்திய இருவரும் மேற்கு ஜேர்மனியிடம் தஞ்சம் கோரியுள்ளனர்.

திட்டமிட்டபடி

### மாஸ்கோவுக்கு நிக்ஸன் விஜயம் செய்வார்

வாஷிங்டன், ஏப். 18

அமெரிக்க ஜனாதிபதி திரு. நிக்ஸன் மே மாதம் 27ம் திகதி திட்டமிட்டபடி சோவியத்யூனியனுக்கு விஜயஞ்செய்வாரென வெள்ளை மாளிகையிலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வியட்நாமில் புதிதாக அமெரிக்கா தாக்குதல் நடத்திவருவதால் அமெரிக்க அதிபரின் மாஸ்கோ விஜயம் நிறுத்தப்படலாமென அரசியல் வட்டாரங்களில் கருத்து நிலவிவந்தது தெரிந்ததே.

### நன்கொடை

பருத்தித்துறை, செவ்

நெல்லியடிப் பட்டின சபைக்குட்பட்ட படிப்பகங்களுக்கு மேற்படி பட்டின சபையால் நன்கொடை வழங்கப்பட்டு வருகிறது. இப்படிப் படிப்பகங்களுக்குரிய விளையாட்டுப் பகுதிகளுக்கு விளையாட்டு உபகரணங்களும் இந்நன்கொடையில் அடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உள்ளூராட்சி ஆணையாளர் விஜயம்

குருநகர், செவ்

இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் உள்ளூராட்சி ஆணையாளர் இன்று முதல் மூன்றுதினங்கள் வடபகுதியிலுள்ள பல உள்ளூராட்சி மன்றங்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை நேரில் பார்வையிடுவார்.

இம்மூன்று தினங்களிலும், மண்டைதீவு கிராம சபை, ஊர்காவற்றுறை பட்டின சபை, கோப்பாய் கிராம சபை, மானிப்பாய் பட்டின சபை, மானிப்பாய் கிராம சபை, சாவகச்சேரி கிராம சபை, நெல்லியடி பட்டின சபை, பருத்தித்துறைப் பட்டின சபை, வல்வெட்டித்துறை நகரசபை, காங்கேசன்துறை பட்டின சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கு சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் பார்வையிடுவார்.

மண்டைதீவு கிராம சபைக்கு விஜயம் செய்ய இருக்கின்றார். இவரை அங்கு வரவேற்பதற்கான ஏற்பாடுகளை மேற்படி கிராமசபைத் தலைவர் திரு. க. கைலாசபிள்ளை செய்துள்ளார். இக்கிராமசபைக்கிருக்கும் அதிமுக்கிய தேவைகள் பற்றி ஆணையாளரிடம் ஒரு மகஜர் சமர்ப்பிப்பதற்கு இக்கிராம சபை முடிவு செய்துள்ளது.

### 175 அபிவிருத்தித் திட்டங்கள்

கொழும்பு, செவ்வாய்

நாட்டிலுள்ள இருபத்தொரு நிர்வாக மாவட்டங்களில் 175 அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு திட்டமிடல் வேலைவாய்ப்பு அமைச்சு அனுமதி அளித்துள்ளது. பழம் பதனிடுதல், உப உணவுப் பொருட்கள் பயிரிடுதல் போன்ற கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்கள் இதில் அடங்கும். [ச]

### பிள்ளைக்கு ஜீவனாம்சம் கட்ட உத்தரவு

மாவிட்டபுரம், செவ்வாய்

சுழிபுரம் ஜீவனாம்ச வழக்கில் பிள்ளைக்கு 35 ரூபா கட்டும்படி உத்தரவிடப்பட்டது.

சுழிபுரத்தைச் சேர்ந்த கலம் என்னும் பெண் தமக்கும் தனது பிள்ளைக்கும் ஜீவனாம்சம் வழங்கும்படி கோரி அதே ஊரைச் சேர்ந்த இராசதுரை என்பவர் மீது தொடர்ந்த வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ஐ. சிவானந்தன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

பலர் சாட்சியமளித்ததை அடுத்து நீதிபதி பிள்ளைக்கு 35 ரூபா கட்டும்படி உத்தரவிட்டார்.

